HSBC ஒன்லைன் வங்கிச் சேவைகள் (தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவைகன்) தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகள்

1. சேவைகள்

(a) த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் (இது **'வங்கி/HSBC'** என்றும் குறிப்பிடப்படும். இச் சொற்பிரயோகம் சந்தர்ப்பம் அனுமதிக்கும் அல்லது தேவைப்படுத்தும் பட்சத்தில் அதன் அடுத்துறுநர்கள் மற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்களையும் உள்ளடக்கும்) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக HSBC இனால் அல்லது அதன் சார்பில் நிறுவப்பட்டு, செயற்படுத்தப்பட்டு மற்றும்/அல்லது பேணப்படும் ஏதேனும் ஒன்லைன் ஊடகத்தின் **("ஒன்லைன் ஊடகம்")** மூலம் வாடிக்கையாளர்களுக்கு (ஒவ்வொருவரும் **"வாடிக்கையாளர்"** என்று குறிப்பிடப்படுவார். இச் சொற்பிரயோகம் சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் வாடிக்கையாளரின் எவரேனும் தனிப்பட்ட பிரதிநிதியை அல்லது சட்டபூர்வ வாரிசையும் உள்ளடக்கும்), பொது இலத்திரனியல் பணப் பரிமாற்ற சுவிச் (CEFTS) / உடனுக்குடனான மொத்தத் தீர்ப்பனவு முறை (RTGS) / இலங்கையின் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைகள் (SLIPS) / தந்திப் பரிமாற்றங்கள் (TTs) மற்றும் வேறேதும் கொடுப்பனவு முறைகள் (இனிமேல, **"கொடுப்பனவுகள் மற்றும் பரிமாற்றங்கள்"** என்று குறிப்பிடப்படும்) உள்ளடங்கலான (ஆனால், அவை மட்டுமல்ல) வங்கிச் சேவை, முதலீடு, நிதி மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக HSBC உடன் தொடர்பு கொள்வதற்கும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் HSBC மற்றும்/அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்களிடமிருந்து (**HSBC குழுமம்** என்பது HSBC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. மற்றும்/அல்லது அதன் ஏதேனும் இணை நிறுவனங்கள், உப நிறுவனங்கள் அல்லது துணை நிறுவனங்களையும் அதன் ஏதேனும் கிளைகள் மற்றும் அலுவலகங்களையும் குறிக்கும். **HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர்** என்பதும் இதே அர்த்தத்தைக் கொண்டிருக்கும்) சேவைகள், வங்கி வசதிகள், தகவல்கள், பண்டங்கள், அனுகூலங்கள், சலுகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் இடமளிக்கும் ஒன்லைன் சேவைகள் மற்றும் வசதிகளை **("சேவைகள்")** காலத்திற்குக் காலம் வழங்கும்.

(b) சேவைகளின் ஒரு பகுதியாக, எவரேனும் நபரினால் (ஒவ்வொருவரும் **"தகவல் வழங்குநர்"** எனப்படுவார். இச் சொற்பிரயோகம் ஏதேனும் தகவலை ஒரு தகவல் வழங்குநருக்கு வழங்கும் ஒருவரையும் உள்ளடக்கும்) விநியோகிக்கப்படும் நிதி, சந்தை

அல்லது வேறேதும் தகவல் மற்றும் தரவை (**"தகவல்"**) ஏதேனும் ஒன்லைன் ஊடகத்தின் வழியாகக் கிடைக்கச் செய்யவும் அத்தகைய தகவல்களிலிருந்து ஏதேனும் வடிவத்தில், ஊடகத்தில் அல்லது வழியில் தொகுக்கப்பட்ட அறிக்கைகளை (**"அறிக்கைகள்"**) வழங்கவும் வங்கி நடவடிக்கை எடுக்கக்கூடும்.

(c) வழங்கப்படும் சேவைகளின் நோக்கெல்லை மற்றும் வகையைத் தீர்மானிக்கவும் காலத்திற்குக் காலம் அவற்றை மாற்றவும் வங்கிக்கு உரிமையுண்டு. அவை பின்வரும் விடயங்கள் தொடர்புடையனவாக (ஆனால் அவை மட்டுமல்ல) இருக்கும்: -

i. எந்த நேரத்திலும் சேவைகளை விரிவுபடுத்துதல், மாற்றுதல் அல்லது குறைத்தல்.

ii. சேவைகளின் உபயோகத்தில் ஏதேனும் வரையறைகளை விதித்தல் அல்லது மாற்றுதல். சேவைகளைப் பயன்படுத்தி வாடிக்கையாளர் மேற்கொள்ளக்கூடிய ஏதேனும் கொடுக்கல் வாங்கலின் பெறுமதி தொடர்பில் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச நாளாந்த உச்சவரம்புகளை விதிப்பதும் இதில் உள்ளடங்கும்.

iii. சேவை வழங்கப்படும் வழமையான நேரங்களையும் ஏதேனும் சேவைகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கான தினசரி காலக்கெடுக்களையும் நிர்ணயித்தல் மற்றும் மாற்றுதல். உரிய தினசரி காலக்கெடுவிற்குப் பின்னர் வங்கிக்குக் கிடைக்கும் வாடிக்கையாளரின் ஏதேனும் அறிவுறுத்தல் அடுத்த வியாபார நாளில் (வியாபார நாள் என்பது, எம்மால் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிட்டால், இலங்கையில் வங்கிச் சேவை/வேலை இடம்பெறும் நாள் ஒன்றையும் வழமையான வங்கிச் சேவை/வேலை மணித்தியாலங்களையும் குறிக்கும்). கிடைக்கப்பெற்றதாகக் கருதப்படும். வங்கியானது வெவ்வேறு நேர வலயங்களில் செயற்படும் வெவ்வேறு சந்தைகளின் நேரங்களுடன் தொடர்புபடுத்தி வேலை நாள், தினசரி காலக்கெடு நேரம் என்பவற்றைத் தீர்மானிக்கும்.

(d) சேவைகளின் நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட கணக்கை (கணக்குகளை) பெயரிடும்படி அல்லது பதிவு செய்யும்படி வங்கியானது வாடிக்கையாளரைக் கேட்கக்கூடும்.

(e) வாடிக்கையாளர் இச் சேவைகளைப் பெறுவதற்காக இணையத்தள உலாவி (Internet Browser) மற்றும்/அல்லது மொபைல் உலாவி (Mobile Browser) மற்றும்/அல்லது மொபைல் பிரயோகம் மற்றும்/அல்லது ஏதேனும் டிஜிட்டல் சாதனத்தைப் பயன்படுத்தலாம்.

2. ஆளுகை செய்யும் விதிகள் மற்றும் நிபந்தனைகள்

கணக்குகளைச் செயற்படுத்தவும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளவும் காலத்திற்குக் காலம் வங்கி மற்றும்/HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களினால் வழங்கப்படும் சேவைகள், வசதிகள், தகவல்கள், பண்டங்கள், அனுகூலங்கள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒரு மேலதிக வழியை இச் சேவைகள் வாடிக்கையாளருக்கு வழங்குகின்றன. இச் சேவைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் யாவும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள், www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளத்தில் வங்கியின் பொதுவான பொறுப்புத் துறப்பு அறிக்கை, இணையத்தளத் தனியுரிம அறிக்கை என்பவற்றிற்கு அமைவாகவையாக இருக்கும். உரிய கணக்குகள், கொடுக்கல் வாங்கல்கள், சேவைகள், வசதிகள், தகவல்கள், பண்டங்கள், அனுகூலங்கள் அல்லது சலுகைகள் தொடர்பான மற்றைய சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளும் தொடர்ந்து செல்லுபடியாகும். எனினும், எங்கேனும் ஏதேனும் முரண்பாடு காணப்படின், இச் சேவைகளின் நோக்கத்திற்காக இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளே மேலாதிக்கம் செலுத்தும்.

3. சேவைகளின் பயன்பாடு

(a) இச் சேவைகளை முதல் தடவையாகப் பயன்படுத்துவதற்கு, வாடிக்கையாளர் ஒன்லைனில் அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் வேறேதும் முறையில் தன்னைப் பதிவு செய்துகொள்வதுடன், இச் சேவைகளின் உபயோகம் தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்க வேண்டும். அத்துடன், தன்னை அடையாளம் காண்பதற்கு வங்கியினால் கோரப்படும் நியாயமான விபரங்களையும் அவர் வழங்க வேண்டும்.

(b) சேவைகளைப் பயன்படுத்துவதற்காகப் பதிவு செய்வதன் மூலம், சேவைகள் தொடர்பாக வாடிக்கையாளர் வங்கிக்கு வழங்கிய சகல தகவல்களும் உண்மையானவை, பூரணமானவை மற்றும் இற்றைப்படுத்தியவை என்பதை வாடிக்கையாளர் உறுதிப்படுத்துகிறார்.

(c) இச் சேவைகள் வாடிக்கையாளரின் தனி மற்றும் பிரத்தியே பாவனைக்கானவை.

(d) வாடிக்கையாளர் இச் சேவைகள், தகவல்களை மற்றும்/அல்லது அறிக்கைகளை ஏதேனும் சட்டவிரோத நோக்கத்திற்காக அல்லது அது தொடர்பாகப் பயன்படுத்தவோ அல்லது தெரிந்துகொண்டே இன்னுமொருவர் பயன்படுத்த அனுமதிக்கவோ கூடாது. அத்தகைய

ஏதேனும் பாவனை பற்றித் தெரியவந்த உடனேயே வாடிக்கையாளர் அது பற்றி வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

(e) ஒன்லைன் மூலமான விசாரணைக்கான பதிலாக ஒன்லைன் ஊடகத்தில் (அல்லது ஊடகங்களில்) அல்லது வேறு வழிகளில் தெரிவிக்கப்படும் ஏதேனும் பரிவர்த்தனை வீதம், வட்டி வீதம், கொடுக்கல் வாங்கல் வீதம், ஏனைய விலைகள் மற்றும் வங்கியினால் குறிப்பிடப்படும் தகவல்கள் யாவும் விளக்கத்திற்காக மட்டுமேயன்றி, அவை எவரையும் பிணிக்க மாட்டா. உரிய கொடுக்கல் வாங்கலின் நோக்கத்திற்காக வங்கியினால் வழங்கப்படும் வீதங்கள், விலைகள் மற்றும் தகவல்கள் யாவும் வங்கியினால் குறிப்பிடப்பட்ட ஏதேனும் வித்தியாசமான வீதங்கள், விலைகள் அல்லது தகவல்களைக் கருத்திற்கொள்ளாமல், வாடிக்கையாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் வாடிக்கையாளரைப் பிணிக்கும்.

(f) அறிவுறுத்தல்கள், தகவல்கள் அல்லது தொடர்பாடல்கள் இணையத்தளம் ஊடாக வழங்கப்படும்போது, அனுப்பீடு தொடர்பில் நேரப் பின்னடைவு, முழு அல்லது பகுதியளவிலான விடுபடுகை அல்லது தகவல் சிதைவு ஏற்படக்கூடும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டு, அதற்கு இணங்குகின்றார். அத்தகைய எந்த விதத்திலான தாமதத்திற்கும் வங்கி பொறுப்பாளியாகாது.

4. பயனர் ID மற்றும் கடவுச்சொல்

(a) இச் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளரை அடையாளம் காண்பதற்காக, பயனர் அடையாளக் குறியீடு **(“User ID”)** மற்றும் கடவுச்சொல் **(“Password”)** என்பவற்றைத் தெரிவு செய்வதற்கு வங்கியினால் ஒன்லைனில் வழங்கப்படும் வழிகாட்டுதலை வாடிக்கையாளர் பின்பற்ற வேண்டும்.

(b) வாடிக்கையாளர் தனது கடவுச்சொல்லை எந்த நேரத்திலும் மாற்றலாம். ஆனால், அது பொருத்தமானதாகவும் வங்கியின் ஒன்லைன் ஊடகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இருந்தால் மாத்திரமே அந்த மாற்றம் நடைமுறைக்கு வரும். பயனர் IDஐ வாடிக்கையாளரினால் மாற்ற முடியாது.

(c) சேவைகளைப் பெறுவதற்குப் பாதுகாப்புக் குறியீடு (பாதுகாப்புச் சாதனத்தினால் (பாதுகாப்புச் சாதனம் என்பது பாதுகாப்புக் குறியீட்டை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் இலத்திரனியல் சாதனம்) உருவாக்கப்படும் ஒரு தடவைக் கடவுச்சொல்) ஒன்றை பயன்படுத்தும்படி வங்கியானது தனது தனித் தற்றுணிபின் பேரில் வாடிக்கையாளரைக்

கேட்கக்கூடும். அத்தகைய சந்தர்ப்பத்தில், பாதுகாப்புச் சாதனம் (பாதுகாப்புக் குறியீட்டை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்படும் ஓர் இலத்திரனியல் சாதனம்) ஒன்றிற்காக அல்லது, ஏற்கனவே ஒரு பாதுகாப்புச் சாதனம் வழங்கப்பட்டு, அது தொலைந்திருந்தால் அல்லது முறைப்படி செயற்படத் தவறியிருந்தால், பதிலீட்டுச் சாதனம் ஒன்றிற்காக வங்கியிடம் விண்ணப்பிப்பது வாடிக்கையாளரின் தனிப் பொறுப்பாகும்.

(d) பயனர் ID, கடவுச்சொல், பாதுகாப்புச் சாதனம், பாதுகாப்புக் குறியீடு என்பவற்றை இரகசியமாகப் பேணுவதில் வாடிக்கையாளர் வாடிக்கையாளர் எப்போதும் நியாயமான கவனத்தைச் செலுத்த வேண்டும். பயனர் ID, கடவுச்சொல் மற்றும்/அல்லது பாதுகாப்புக் குறியீட்டை வாடிக்கையாளர் எந்த நேரத்திலும் எத்தகைய சூழ்நிலையிலும் வேறொரு நபருக்குத் தெரிவிக்கக் கூடாது. பாதுகாப்புச் சாதனம் இன்னுமொருவரின் கைக்கு அல்லது கட்டுப்பாட்டிற்குள் வருவதை வாடிக்கையாளர் அனுமதிக்கக் கூடாது.

(e) பயனர் ID, கடவுச்சொல் மற்றும்/அல்லது பாதுகாப்புக் குறியீடு தற்செயலாக அல்லது அதிகாரமற்ற முறையில் இன்னொருவருக்குத் தெரிந்துவிட்டால், அதற்கான முழுப் பொறுப்பும் வாடிக்கையாளரையே சாரும். பயனர் ID, கடவுச்சொல், பாதுகாப்புச் சாதனம் அல்லது பாதுகாப்புக் குறியீடு அனுமதியற்ற நபர்களினால் அல்லது அனுமதியற்ற நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதால் ஏற்படக்கூடிய இடர்களுக்கும் வாடிக்கையாளரே பொறுப்பாளியாவார்.

(f) பயனர் ID மற்றும்/அல்லது கடவுச்சொல் அனுமதியற்ற ஒருவருக்குத் தெரிந்துவிட்டது என்றோ அல்லது சேவைகள் அனுமதியற்ற முறையில் பயன்படுத்தப்படுகின்றன என்றோ அறியவந்தால் அல்லது சந்தேகப்பட்டால், வாடிக்கையாளர் இயன்றளவு விரைவில் வாடிக்கையாளர் வங்கிக்கு நேரில் வந்து அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தொடர்புகொண்டு அறிவிக்க வேண்டும். (விபரங்களை எழுத்தில் ஊர்ஜிதம் செய்யும்படி வங்கி வாடிக்கையாளரைக் கேட்கக்கூடும்). அத்தகைய அறிவித்தல் வங்கிக்குக் கிடைக்கும் வரை அனுமதியற்ற நபர்களினால் அல்லது அனுமதியற்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட சேவைகள் அனைத்திற்கும் வாடிக்கையாளரே பொறுப்பாளியாவார்.

5. வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்கள்

5.1 பொது

(a) வாடிக்கையாளர் இச் சேவைகளுக்காகப் புகுபதிகை செய்து ஒன்லைனில் வங்கிக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக பயனர் ID, கடவுச்சொல், பாதுகாப்புக் குறியீடு என்பவற்றையும் வங்கியினால் காலத்திற்குக் காலம் பரிந்துரைக்கப்படும் வேறேதும் அடையாளங்காட்டிகளையும் குறிப்பிட வேண்டும். சேவைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வங்கியினால் காலத்திற்குக் காலம் பரிந்துரைக்கப்படும் முறையில் வழங்கப்படுவதுடன் முறைப்படி வங்கிக்குக் கிடைக்கும் வரை வங்கியினால் பெறப்பட்டவையாகக் கருதப்பட மாட்டா.

(b) பயனர் ID, கடவுச்சொல், பாதுகாப்புக் குறியீடு என்பவற்றையும் வங்கியினால் காலத்திற்குக் காலம் பரிந்துரைக்கப்படும் வேறேதும் அடையாளங்காட்டிகளையும் குறிப்பிட்டு இச் சேவைகள் தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை வங்கியின் அல்லது சம்பந்தப்பட்ட HSBC குழும அங்கத்துவ நிறுவனத்தின் சம்மதம் இல்லாமல் இரத்துச் செய்யவோ வாபஸ் பெறவோ முடியாது. வங்கியினால் அல்லது சம்பந்தப்பட்ட HSBC குழும அங்கத்துவ நிறுவனத்தினால் புரிந்துகொள்ளப்பட்டு, நல்ல நம்பிக்கையுடன் செயற்படுத்தப்படும் அத்தகைய சகல அறிவுறுத்தல்களும், அவை வாடிக்கையாளரினால் வழங்கப்பட்டவையாக இருந்தாலும் வாடிக்கையாளரெனக் கூறப்படும் இன்னொருவரினால் வழங்கப்பட்டவையாக இருந்தாலும், மாற்ற முடியாதவையாகவும் வாடிக்கையாளரைப் பிணிப்பவையாகவும் இருக்கும். வாடிக்கையாளரின் பயனர் ID, கடவுச்சொல், பாதுகாப்புக் குறியீடு என்பவற்றையும் வேறேதும் அடையாளங்காட்டிகளையும் (இருப்பின்) உறுதிப்படுத்துவதைத் தவிர, அறிவுறுத்தல் வழங்குபவரின் அடையாளம் அல்லது அதிகாரம் என்பவற்றையோ அல்லது அத்தகைய அறிவுறுத்தலின் உண்மைத் தன்மையையோ உறுதிப்படுத்தும் கடப்பாடு எதுவும் வங்கிக்கோ அல்லது சம்பந்தப்பட்ட HSBC குழும அங்கத்துவ நிறுவனத்திற்கோ கிடையாது.

(c) செயற்படுத்துவதற்குச் சாத்தியமானது மற்றும் நியாயமானது என்றும் வங்கியின் வழமையான வியாபார நடைமுறைகள் மற்றும் ஒழுங்குகளுக்கு அமைவானவை என்றும் கருதும் அறிவுறுத்தல்களை மாத்திரமே செயற்படுத்த வங்கி நடவடிக்கை எடுக்கும்.

(d) இச் சேவைகள் மூலம் ஓர் அறிவுறுத்தல் பெறப்பட்டது மற்றும்/அல்லது ஒரு கொடுக்கல் வாங்கல் நிறைவேற்றப்பட்டது என்ற தகவல் அல்லது ஊர்ஜிதப்படுத்தல் வங்கியினால் ஒன்லைனில் வழங்கப்படும். அத்தகைய தகவல் அல்லது ஊர்ஜிதப்படுத்தல்

அனுப்பப்பட்ட உடனேயே வாடிக்கையாளருக்குக் கிடைத்துவிட்டதாகக் கருதப்படும். அத்தகைய தகவலை அல்லது ஊர்ஜிதப்படுத்தலைப் பார்த்தறிவது வாடிக்கையாளரின் கடமையாகும். இது போன்ற தகவல் அல்லது ஊர்ஜிதப்படுத்தலுக்கு வழமையாக எடுக்கும் நேரத்திற்குள் உரிய தகவல் அல்லது ஊர்ஜிதப்படுத்தல் கிடைக்காவிட்டால், வங்கியுடன் தொடர்புகொண்டு விசாரிப்பதும் வாடிக்கையாளரின் கடமையாகும்.

(e) ஏதேனும் கணக்கு அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஒன்லைன் ஊடகத்தில் (அல்லது ஊடகங்களில்) வழங்கப்படும் தகவல்கள் விளக்கத்திற்கான உதாரணம் மட்டுமே. அத்தகைய கணக்கு மற்றும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வங்கியின் பதிவேடுகளிலுள்ள தகவல்களே, மாறாக நிரூபிக்கப்படாத வரையில், சரியான இறுதி முடிவாகக் கொள்ளப்படும்.

5.2 கொடுப்பனவுகள் மற்றும் பரிமாற்றங்கள் தொடர்பான விசேட நிபந்தனைகள்

வாடிக்கையாளர் இத்தால் பின்வருமாறு இணங்கி ஏற்றுக்கொள்கின்றார்:

(a) CEFTS உள்ளடங்கலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வழங்கப்படும் சகல தகவல்களும் தெளிவாகவும் பூரணமாகவும் முற்றிலும் சரியாகவும் இருக்க வேண்டும். பூரணமற்ற அல்லது போதாத தகவல்கள் வழங்கப்பட்டால், கொடுப்பனவு அறிவுறுத்தல் தாமதிக்கப்படும், நிராகரிக்கப்படும் அல்லது பிரதிநிதித்துவ/பயனடையும் வங்கியினால் திருப்பியனுப்பப்படும் என்பதுடன், சந்தர்ப்பத்திற்கேற்ப, பிரதிநிதித்துவ/பயனடையும் வங்கியின் மற்றும்/அல்லது HSBCயின் அறவீடுகளுக்கும் உட்படுத்தப்படலாம். அத்தகைய நிராகரிப்பு, திருப்பியனுப்பப்படுதல் மற்றும்/அல்லது தாமதிப்பின் விளைவாக வாடிக்கையாளருக்கு மற்றும்/அல்லது வேறு எவரேனும் நபருக்கு ஏற்படும் ஏதேனும் இழப்பு அல்லது சேதத்திற்கான எவ்வித பொறுப்பையும் HSBC ஏற்றுக்கொள்ளாது. பிரதிநிதித்துவ மற்றும்/அல்லது பயனடையும் வங்கியினால் விதிக்கப்படும் ஏதேனும் அறவீடுகள் கொடுப்பனவுத் தொகையிலிருந்து அல்லது வங்கியில் வாடிக்கையாளர் வைத்திருக்கும் ஏதேனும் கணக்கொன்றிலிருந்து கழித்துக்கொள்ளப்படும்.

(b) வங்கியானது, கொடுப்பனவுகள் மற்றும் பரிமாற்றங்களைச் செயற்படுத்தும்போது, வாடிக்கையாளரினால் வழங்கப்பட்ட பயனடையும் கணக்கின் விபரங்களைப் பயன்படுத்தவோ சரிபார்க்கவோ மாட்டாது. கொடுப்பனவுகள் மற்றும் பரிமாற்றங்களைச் செய்யும்படி வாடிக்கையாளர் மாற்றத்திற்கு இடமில்லாத அதிகாரமளிப்பை வங்கிக்கு

வழங்குகின்றார். கொடுப்பனவுகள் மற்றும் பரிமாற்றங்கள் செய்யப்படுவதன் விளைவாக ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு வங்கி எவ்வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளாது.

(c) அனுப்பப்பட்ட கொடுப்பனவு மற்றும் பரிமாற்ற அறிவுறுத்தலை/அறிவுறுத்தல்களை செயற்படுத்துவதற்கு பயனடையும் வங்கிகளினால் கடைப்பிடிக்கப்படும் ஊர்ஜிதப்படுத்தல் நடைமுறையானது பயனடையும் வங்கியின் உள்ளக நடைமுறைகளுக்கேற்ப வேறுபடக்கூடும். அத்தகைய கொடுப்பனவு மற்றும் பரிமாற்ற அறிவுறுத்தலைத் தொடர்பாடல் செய்ய அல்லது செயற்படுத்த பிரதிநிதித்துவ அல்லது பயனடையும் வங்கி தவறுவதன் விளைவாக அல்லது அதன் தொடர்பாக வாடிக்கையாளருக்கு அல்லது வேறேதும் தரப்பிற்கு ஏற்படக்கூடிய இழப்பிற்கு வங்கி பொறுப்பாளியாகாது.

(d) CEFTS உள்ளடங்கலான கொடுப்பனவுகள் மற்றும் பரிமாற்றங்கள் தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு ஏற்புடைய தினசரி கொடுக்கல் வாங்கல் தொகையின் உச்சவரம்பைத் தனது தனித் தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. மோசடி, சட்ட/ஒழுங்குபடுத்தல் மாற்றம் காரணமாக மாற்றம் தேவைப்படுத்தப்பட்டாலன்றி, வாடிக்கையாளருக்கு முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு, கிடைக்கக்கூடிய உச்சவரம்பை மாற்றும்/நேர்மாற்றம் செய்யும் உரிமையும் வங்கிக்கு உண்டு. அத்தகைய மாற்றங்கள், வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள வாடிக்கையாளரின் மொபைல் தொலைபேசி இலக்கத்திற்கு அனுப்பப்படும் குறுந்தகவல் சேவை (SMS) மூலம் அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்படும் வேறேதும் தொடர்பாடல் முறையின் மூலம் அறிவிக்கப்படும். அது வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட முறைப்படியான அறிவித்தலாகக் கொள்ளப்படும்.

6. கட்டணங்கள்

பாதுகாப்புச் சாதனம் அல்லது டிஜிட்டல் பாதுகாப்புச் சாவியை வழங்குவதற்காக விதிக்கப்படும் கட்டணம் உட்பட சேவைகளின் பாவனை மற்றும்/அல்லது முடிவுறுத்தல் தொடர்பாகக் கட்டணங்களை அறவிடவும் அக் கட்டணங்களை நடைமுறையிலுள்ள விதிப்பனவுகளுக்கு அமைவாக மாற்றவும் வங்கி உரிமை கொண்டுள்ளது. நடைமுறையிலுள்ள விதிப்பனவுகளை வங்கியானது இலங்கையிலுள்ள அதன் கிளைகளில் மற்றும்/அல்லது www.hsbc.lk. என்ற அதன் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பார்வைக்கு வைக்கும். வங்கியானது ஏதேனும் கட்டண வீதங்கள் பற்றிக் காலத்திற்குக் காலம் தீர்மானித்து, அவை

நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் வாடிக்கையாளருக்கு நியாயமான முன்னறிவித்தலை வழங்கும். கட்டணங்கள் நடைமுறைக்கு வந்த திகதியில் அல்லது அதற்குப் பின்னர் வாடிக்கையாளர் இச் சேவைகளைத் தொடர்ந்து பேணினால் அல்லது பயன்படுத்தினால், அக் கட்டணங்கள் வாடிக்கையாளரைப் பிணிக்கும். இக் கட்டணங்கள் வங்கியினால் குறித்துரைக்கப்படும் முறையிலும் கால இடைவெளிகளிலும் வாடிக்கையாளரிடமிருந்து அறவிடப்படும்.

7. வாடிக்கையாளரின் வாக்குறுதிகளும் பொறுப்புக்களும்

(a) சேவைகளை வழங்கும் நோக்கத்திற்காக, வங்கியானது காலத்திற்குக் காலம் நியாயமான முறையில் கோரும் தகவல்களை வாடிக்கையாளர் வழங்க வேண்டும். வங்கிக்கு வழங்கப்படும் சகல தகவல்களும் எல்லா வேளைகளிலும் சரியானவையாகவும் பூரணமானவையாகவும் இற்றைப்படுத்தியவையாகவும் இருப்பதை வாடிக்கையாளர் உறுதிப்படுத்த வேண்டும். வாடிக்கையாளரின் முகவரி மற்றும் ஏனைய தொடர்பு விபரங்கள் இவற்றுள் முக்கியமானவை.

(b) வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் கணக்கு(கள்) மற்றும்/அல்லது வாடிக்கையாளரின் சார்பில் வங்கியினால் செயற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்(கள்) பற்றிய தகவல்களை, அத்தகைய கொடுக்கல் வாங்கல்(கள்) வாடிக்கையாளரின் சார்பில் செயற்படுத்தப்பட்ட ஏதேனும் நியாயாதிக்கத்தின் சட்டத்தினால், விதியினால் அல்லது பிரமாணத்தினால் (சட்டத்தினால் நிர்ப்பந்திக்கப்பட்டாலும் இல்லாவிட்டாலும்)) தேவைப்படுத்தப்படும் நபர்களுக்கு அல்லது அத்தகைய நியாயாதிக்கப் பிரதேசத்தின் ஏதேனும் பரிவர்த்தனைக்கு, அரசாங்கத்திற்கு அல்லது ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு வெளிப்படுத்த அல்லது வழங்க வாடிக்கையாளர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார்.

(c) வாடிக்கையாளர் இச் சேவைகளின் ஏதேனுமொரு பகுதியை அல்லது இணைய வலைத்தளங்களை அல்லது அவற்றிலுள்ள ஏதேனும் மென்பொருளை பகுக்க, நேர்மாற்ற, மொழிபெயர்க்க, மாற்ற, பொருத்தமுடையதாக்க, திருத்தியமைக்க, விரிவுபடுத்த, சேர்க்க அல்லது நீக்கவோ, ஏதேனும் தவறான வழியில் கையாளவோ, சட்ட விரோதமான அல்லது அனுமதியற்ற முறையில் பாவிக்கவோ கூடாது. அவ்வாறு செய்வதற்கு முயலவும் கூடாது.

(d) வர்த்தக நோக்கங்களுக்காக சந்தை விலைகள் மற்றும் வீதங்களை தனது வழமையான வர்த்தக ஊடகங்கள் மூலம் அறிந்து சுயாதீனமாகத் தீர்மானிப்பதும், ஏதேனும்

தகவல் மற்றும்/அல்லது அறிக்கையில் தங்கியிருப்பதற்கு அல்லது அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் அத்தகைய தகவல் மற்றும் அறிக்கையை உறுதி செய்துகொள்வதும், சேவைகள், தகவல்கள், அறிக்கைகள், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் சம்பந்தமாகவும் பொருத்தமான சகல சட்டங்களின் கீழும் வாடிக்கையாளரைப் பாதிக்கக்கூடிய ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாகவும் எழக்கூடிய சட்ட, வரி மற்றும் ஏனைய பிரச்சினைகளில் சுயாதீன நிபுணத்துவ ஆலோசனையைப் பெறுவதும் வாடிக்கையாளரின் பொறுப்பாகும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார்.

8. தகவல்கள் மற்றும் தகவல் வழங்குநர்கள்

(a) தகவல்கள், அறிக்கைகள் மற்றும் அவற்றின் வடிவம், அமைப்பு அல்லது தொகுப்பு முறை, தேர்வு, கட்டமைப்பு, சமர்ப்பணம் மற்றும் வெளிப்பாடு (கூட்டாக **"இரகசியத் தகவல்கள்"**) என்பன வர்த்தக இரகசியங்கள் என்பதையும் அவை வங்கியினதும் சம்பந்தப்பட்ட தகவல் வழங்குநர்களினதும் தனியுரிமச் சொத்துக்கள் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டு, அதற்கு இணங்குகிறார்.

(b) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் வெளிப்படையாக அனுமதிக்கப்படாத பட்சத்தில், வாடிக்கையாளர் பின்வரும் காரியங்களைச் செய்யவோ அல்லது செய்வதற்கு முயலவோ கூடாது:

i. எந்தவொரு இரகசியத் தகவலையும் எந்தவொரு வழியிலும் எந்தவொரு வடிவத்திலும் வேறொரு நபருக்கு விற்றல், கைமாற்றுதல், வெளியிடுதல், உரிமை மாற்றுதல், வழங்குதல், குத்தகைக்கு விடுதல், உப உரிமமளித்தல், பங்களித்தல், கடனளித்தல், விநியோகித்தல், அனுப்பீடு செய்தல், ஒலிபரப்புதல், கேபிள் மூலம் வழங்குதல், சுற்றறிக்கை மூலம் வழங்குதல், பதிவிறக்கம் செய்தல், பிரதியெடுத்தல் மற்றும் ஏனைய வழிகளில் வழங்குதலும் ஏதேனும் இரகசியத் தகவலை வர்த்தக ரீதியில் பயன்படுத்துதலும்.

ii. இரகசியத் தகவல்களில் அல்லது அவற்றுடன் காணப்படும் ஏதேனும் தனியுரிமக் அடையாளக் குறியீடுகளை (ஏதேனும் வர்த்தகச் சின்னங்கள் அல்லது ஆக்கியோனுரிமை அறிவிப்புக்களும் உட்படும்) ஏதேனும் வழியில் நீக்குதல், உருச்சிதைவு செய்தல், அழித்தல், இடம்மாற்றுதல் மற்றும் திரிபுபடுத்துதல்.

iii. இரகசியத் தகவல்களை வேறேதும் நிகழ்ச்சித் திட்டங்களுடன் சேர்த்தல் அல்லது ஒருங்கிணைத்தல்.

(c) ஏதேனும் இரகசியத் தகவலின் வெளிப்படுத்துகை மீதான தடைகள் பின்வரும் சந்தா்ப்பங்களில் செல்லுபடியாக மாட்டா:

i. வெளிப்படுத்துகை சட்டத்தினால் நிா்ப்பந்திக்கப்படும்போது. சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் அளவிற்கும் வெளிப்படுத்துதல் தேவையென வாடிக்கையாளரினால் வங்கிக்கு எழுத்துமூல அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னரும் மாத்திரம்.
ii. வங்கியானது அத்தகைய வெளிப்படுத்துகைக்கு எழுத்து மூலம் வெளிப்படையாக இணக்கம் தெரிவிக்கும்போது.

(d) இரகசியத் தகவல்கள் தொடா்பான சகல உரிமைகள், அந்தஸ்துகள் மற்றும் அக்கறைகளும் அவற்றுடன் தொடா்புடைய ஆக்கியோனுரிமைகள், வா்த்தகச் சின்னங்கள், சேவைக் குறியீடுகள், தனியுரிமச் சொத்துக்கள், வா்த்தக இரகசியங்கள் மற்றும் பிரத்தியேக வேலைகள் அனைத்தும் வங்கியினதும் சம்பந்தப்பட்ட தகவல் வழங்குநா்களினதும் பிரத்தியேக சொத்துக்கள் என்பதுடன் தொடா்ந்தும் அப்படியே இருக்கும். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவான முறையில் தகவல்கள் மற்றும் அறிக்கைகளைப் பெறுவதற்கு வழங்கப்பட்டுள்ள உரிமையைத் தவிர, வேறெந்த உரிமை, அந்தஸ்து மற்றும் அக்கறையும் வாடிக்கையாளருக்கு வழங்கப்படவோ அல்லது கைமாற்றப்படவோ மாட்டாது. அத்தகைய உரிமை, அந்தஸ்து அல்லது அக்கறை தனக்கு உள்ளதெனக் காட்டும் விதத்தில் வாடிக்கையாளா் எவ்வித பிரதிநிதித்துவத்தையும் செயலையும் மேற்கொள்ளக் கூடாது.

(e) தகவல் வழங்குநா் ஒருவா் தன்னால் வழங்கப்படும் ஏதேனும் தகவல் தொடா்பில் காலத்திற்குக் காலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளை விதிக்கக்கூடும். அத்தகைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி முன்னறிவித்தல் வழங்கப்பட்டு, அவை நடைமுறைக்கு வந்த திகதியில் அல்லது அதற்குப் பின்னா் வாடிக்கையாளா் அத் தகவலைப் பயன்படுத்தினால், குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளை அவா் ஏற்றுக்கொண்டாா் என்று கருதப்படும்.

(f) தகவல்களும் அறிக்கைகளும் உதவிக் குறிப்பிற்காக மட்டுமே வழங்கப்படுகின்றன. வா்த்தக அல்லது ஏனைய நோக்கங்களுக்காக அல்ல. வாடிக்கையாளரோ அல்லது ஏதேனும் தகவல் வழங்குநரோ வாடிக்கையாளருக்கான ஒரு முதலீட்டு ஆலோசகராகக் கருதப்பட மாட்டாா்.

(g) எவையேனும் தகவல்கள் அல்லது அறிக்கைகளின் வரிசைக் கிரமம், சரிநுட்பம், உண்மைத் தன்மை, நம்பகத்தன்மை, போதுமை, நேரந்தவறாமை அல்லது பூரணத்துவம் குறித்தோ அல்லது ஏதேனும் நோக்கத்திற்காக அவற்றின் பொருத்தத் தன்மை குறித்தோ எவ்வித உத்தரவாதத்தையும் வங்கியோ அல்லது எவரேனும் தகவல் வழங்குநரோ வழங்குவதில்லை. அவ்வாறே, அத்தகைய தகவல்கள் அல்லது அறிக்கைகளில் வாடிக்கையாளர் அல்லது வேறொரு நபர் தங்கியிருப்பதால் ஏற்படும் விளைவுகளுக்கும் வங்கியோ அல்லது எவரேனும் தகவல் வழங்குநரோ (குற்றம் அல்லது ஒப்பந்த மீறுகை அல்லது வேறேதும் காரணத்திற்காக) எவ்வித பொறுப்பையும் ஏற்பதில்லை.

(h) எந்தவொரு தகவலும், அத் தகவலை வங்கிக்கு நேரடியாக வழங்கிய தகவல் வழங்குநர் யார் என்பதை அடையாளம் காட்டி, அவர் வழங்கிய அதே வடிவத்திலேயே கிடைக்கச் செய்யப்படும். எந்தவொரு தகவல் வழங்குநராலும் வழங்கப்பட்ட எந்தவொரு தகவலையும் வங்கி ஆமோதிக்கவோ அல்லது அது பற்றிக் கருத்துத் தெரிவிக்கவோ மாட்டாது. அத்தகைய ஏதேனும் தகவலைச் சரிபார்க்கும் அல்லது ஊர்ஜிதம் செய்யும் கடமையும் வங்கிக்குக் கிடையாது.

(i) தகவல்கள் மற்றும்/அல்லது அறிக்கைகள் தொடர்பாக எவ்வித வாக்குறுதி, பரிந்துரை அல்லது உத்தரவாதமும் வழங்கப்படுவதில்லை என்பதுடன் அவ்வாறு கருதவும் முடியாது. அத்தகைய வாக்குறுதி, பரிந்துரை அல்லது உத்தரவாதத்தை வழங்க வங்கியின் அல்லது ஒரு தகவல் வழங்குநரின் எந்தவொரு ஊழியருக்கும் அல்லது முகவருக்கும் அதிகாரம் கிடையாது.

9. வங்கியின் பொறுப்புக்கள்

(a) சேவைகள் தொடர்பான வங்கியின் அமைப்புக்கள் போதிய பாதுகாப்பு ஒழுங்குகளுடன் பொருத்தப்பட்டிருப்பதையும் செயற்பாட்டு அமைப்புக்களில் இடர்கள் கட்டுப்படுத்தப்பட்டு முகாமை செய்யப்படுவதையும் உறுதிப்படுத்துவதற்கு நாம் நியாயமான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை வங்கி எடுக்கும். இந்த விடயத்தில், காலத்திற்குக் காலம் வங்கிக்குப் பொருத்தமாக அமையும் ஏதேனும் சட்டம், விதிகள், பிரமாணங்கள், வழிகாட்டுதல்கள், சுற்றறிக்கைகள், நடத்தைக் கோவைகள், நடப்பிலுள்ள சந்தை நடைமுறைகள் என்பன கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(b) சேவைகள், தகவல்கள் மற்றும் அறிக்கைகள் வாடிக்கையாளரின் கணனி வன்பொருள், மென்பொருள் அல்லது உபகரணங்களைப் பாதிக்கக்கூடிய வைரஸ்களை அல்லது வேறு அழிவுக் காரணிகளைக் கொண்டிருக்கவில்லை என்பதற்கு வங்கியோ அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரோ அல்லது ஒரு தகவல் வழங்குநரோ எவ்வித உத்தரவாதத்தை அல்லது பரிந்துரையையும் வழங்குவதில்லை.

(c) வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புச் சாதனம், தேவையான சகல வேளைகளிலும் சேவைகளைப் பெறக்கூடியதாகச் செயற்படுவதை உறுதிப்படுத்த நியாயமான சகல நடவடிக்கைகளையும் வங்கி எடுக்கும். எனினும், பாதுகாப்புச் சாதனம் சரியாகச் செயற்படத் தவறினால், வாடிக்கையாளர் அது பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில், மாற்றீடாக புதிய பாதுகாப்புச் சாதனம் ஒன்றை வாடிக்கையாளருக்கு இலவசமாக வழங்குவது மட்டுமே வங்கியின் பொறுப்பாகும். எனினும், இது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும்:

i. பழுதடைந்த பாதுகாப்புச் சாதனம், அது வழங்கப்பட்ட 90 தினங்களுக்குள், வங்கிக்கு மீளக் கையளிக்கப்பட வேண்டும்.
ii. பாதுகாப்புச் சாதனம் சரியாகச் செயற்படாமைக்கு, கணக்கு வைப்பாளரின் தவறு அல்லது கவனயீனம் காரணமல்ல என்பதையிட்டு வங்கி திருப்தியடைய வேண்டும்.

(d) சரத்து 9(c) இல் தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தவிர, இப் பாதுகாப்புச் சாதனம் தொடர்பாக ஏதேனும் பாதுகாப்புச் சாதனத்தின் திருப்திகரமான தரம், வணிகத்தன்மை மற்றும் தகுதி பற்றிய ஏதேனும் உட்கிடையான நிபந்தனையின் மீறலுக்கான பொறுப்பு உட்பட வேறெந்தப் பொறுப்பும் வங்கிக்கு கிடையாது. அத்துடன், வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைவாகப் பாதுகாப்புச் சாதனத்தை வைத்திருப்பதற்கு மற்றும்/அல்லது பயன்படுத்துவதற்கு வாடிக்கையாளர் தவறுவதால் வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு அல்லது சேதங்களுக்கும் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

(e) சரத்து 10(b) பிரயோகிக்கப்பட்டாலன்றி, அல்லது வங்கியின் அல்லது HSBC குழும அங்கத்தவர் ஒருவரின் அல்லது ஒரு மூன்றாம் தரப்பின் அல்லது தகவல் வழங்குநரின் மற்றும் அவற்றின் ஊழியர்களின் பூரண கவனயீனம் அல்லது வேண்டுமென்றே இழைக்கப்பட்ட தவறு காரணமாக இருந்தால், பின்வரும் நிகழ்வு ஒன்றின் காரணமாக அல்லது அது தொடர்பில் ஏற்படக்கூடிய நேரடி மற்றும் எதிர்பார்க்கக்கூடிய இழப்பு மற்றும் சேதம் (இருப்பின்) அல்லது உரிய கொடுக்கல் வாங்கல் தொகை (இவற்றில் எது குறைந்ததோ) என்ற அளவில்

மாத்திரமும் உள்ள பொறுப்புக்களைத் தவிர, பொறுப்புக்களைத் தவிர, வாடிக்கையாளருக்கு அல்லது வேறெந்த நபருக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு வங்கியை அல்லது HSBC குழும அங்கத்தவர் ஒருவரை பொறுப்பாளியாக்க முடியாது:

i. சேவைகளின் பாவனை (பாதுகாப்புச் சாதனத்தின் பாவனையும் இதில் உள்ளடங்கும்) மற்றும்/அல்லது வாடிக்கையாளரின் அல்லது (அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படாத) இன்னுமொருவரின் அவ்வாறான பாவனை காரணமாக தகவல்கள் பெறப்படுதல்.

ii. இச் சேவைகளை வழங்குவதில், சேவை தொடர்பான அறிவுறுத்தல்களை அல்லது தகவல்களை அனுப்பீடு செய்வதில் அல்லது ஒன்லைன் ஊடகங்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதில், எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஏதேனும் செயல்கள், விடுபடுகைகள் அல்லது ஏதேனும் தொடர்பாடல் வலையமைப்பின் தவறுகை, மூன்றாம் தரப்பொன்றின் செயல் அல்லது விடுபடுகை, மின்சார இழப்பு, உபகரணங்களின் செயலிழப்பு, கோளாறு அல்லது போதாமை, பொருத்துகை அல்லது வசதிகள் அல்லது ஏதேனும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், நெறிக் கோவைகள், பணிப்புரைகள், ஒழுங்குபடுத்தல் வழிகாட்டுதல்கள் அல்லது அரசாங்கக் கட்டளைகள் (அவை சட்ட வலு உள்ளவையாக அல்லது அற்றவையாக இருக்கலாம்) போன்ற சூழ்நிலைகள் காரணமாக ஏற்படக்கூடிய துண்டிப்பு, இடையீடு, இடைநிறுத்தம், தாமதம், இழப்பு, கிடையாமை, சிதைவு அல்லது வேறேதும் தவறுகைகள் (பாதுகாப்புச் சாதனத்தைப் பயன்படுத்திப் பாதுகாப்புக் குறியீட்டை உருவாக்குவதில் ஏற்படக்கூடிய ஏதேனும் துண்டிப்பு, இடையீடு, இடைநிறுத்தம், தாமதம் அல்லது தவறுகையும் இதில் உள்ளடங்கும்).

iii. ஏதேனுமொரு தொடர்பாடல் வலையமைப்பு வழங்குநரின் ஏதேனும் அமைப்பில், உபகரணத்தில் அல்லது கருவியில் அல்லது அவற்றின் ஊடாக, வாடிக்கையாளரின், சேவைகளின் மற்றும்/அல்லது இச் சேவைகள் மூலம் வாடிக்கையாளர் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் தகவல்கள் மற்றும்/அல்லது தரவுகள் அனுப்பீடு செய்யப்படுதல் மற்றும்/அல்லது சேமிக்கப்படுதல்.

(f) ஏதேனும் தற்செயலான, நேரடியற்ற, விசேட, விளைவான அல்லது உதாரணமான சேதங்களுக்காக, எந்தச் சந்தர்ப்பத்திலும் வங்கி அல்லது HSBC குழும அங்கத்தவர் ஒருவர் அல்லது ஒரு தகவல் வழங்குநர், வாடிக்கையாளருக்கோ அல்லது வேறெந்த நபருக்குமோ

பொறுப்பாளியாக இருக்க வேண்டியதில்லை. இத்தகைய சேதம் ஏதேனும் பாவனை, வருமான, இலாப அல்லது சேமிப்பு இழப்பாகவும் இருக்கலாம்.

10. வாடிக்கையாளரின் பொறுப்புக்கள்

(a) சரத்து 10(b) பிரயோகிகப்பட்டாலன்றி, சேவைகளின் பாவனை (பாதுகாப்புச் சாதனத்தின் பாவனையும் இதில் அடங்கும்) மூலம் அல்லது அது தொடர்பாக ஏற்படும் சகல விளைவுகளுக்கும் மற்றும்/அல்லது வாடிக்கையாளரின் அல்லது (அதிகாரமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்படாத) இன்னுமொருவரின் அவ்வாறான பாவனை காரணமாக பெறப்படும் ஏதேனும் தகவல் அல்லது அறிக்கை அல்லது வேறேதும் தகவலுக்கும் வாடிக்கையாளரே முழுப் பொறுப்பாளியாவார்.

(b) சரத்து 4(f) க்கு முரணாகாத வகையிலும், வங்கியின் நியாயமான கருத்துப்படி வாடிக்கையாளரின் கவனயீனம், மோசடி அல்லது தவறு எதுவும் இடம்பெறாத பட்சத்திலும், பின்வரும் ஒரு காரணத்தின் விளைவாக இச் சேவைகளின் அனுமதியற்ற பாவனை மூலம் ஏற்படும் நிதி இழப்பு அல்லது இடமாற்றத்திற்கு வாடிக்கையாளர் பொறுப்பாளியாக மாட்டார்:

i. வங்கியானது சரத்து 9(a) க்கு அமைவாக இடர் கட்டுப்பாட்டு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை எடுத்திருந்தால் தடுத்திருக்கக்கூடிய ஒரு கணனிக் குற்றச் செயல்.
ii. வங்கியின் மனித அல்லது கணனி அமைப்புத் தவறு.
iii. வங்கி, அதன் அலுவலர்கள் அல்லது ஊழியர்களின் பூரண அலட்சியம் அல்லது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட தவறினால் கொடுப்பனவு தவறப்பட்டமை அல்லது பிழையான இடத்திற்கு அனுப்பப்பட்டமை.

(c) வங்கியின், HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரின், தகவல் வழங்குநர் ஒருவரின் அல்லது அவர்களின் அலுவர்கள் அல்லது ஊழியர்களின் பூரண அலட்சியம் அல்லது சுயவிருப்பத்திலான தவறுகை இடம்பெற்றிருந்தாலன்றி அல்லது சரத்து 10(b) பிரயோகிக்கப்பட்டிருந்தாலன்றி, இச் சேவைகள், தகவல்கள் மற்றும்/அல்லது அறிக்கைகள் தொடர்பில் அல்லது இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் வங்கியின் அதிகாரங்கள் மற்றும் உரிமைகள் பிரயோகிக்கப்படுவது அல்லது பேணப்படுவது தொடர்பில் வங்கியினால்,, HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்துவ நிறுவனத்தினால் அல்லது அவற்றின் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்களினால் உறப்படும் அல்லது அவர்களுக்கு

ஏற்படும் பொறுப்புக்கள், உரிமைக் கோரல்கள், கோரிக்கைகள், இழப்புக்கள், சேதங்கள், பாதிப்புக்கள், கட்டணங்கள் (சட்டக் கட்டணங்கள் தொடர்பான பூரண இழப்பெதிர்காப்பும் இதில் உட்படும்) மற்றும் சகல விதமான செலவுகளிலிருந்தும் அவர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகள் அல்லது வழக்குகளிலிருந்தும் வாடிக்கையாளர் அவர்களுக்கு இழப்பெதிர்காப்பு வழங்க வேண்டும்..

11. மாறுபாடுகள் மற்றும் முடிவுறுத்தல்

(a) சரத்து 13க்கு அமைவாக முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு, காரணம் எதுவும் காட்டாமல் எந்த நேரத்திலும் இச் சேவைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையேனும் அல்லது வாடிக்கையாளரினால் அவை பயன்படுத்தப்படுவதை இடைநிறுத்த அல்லது முடிவுறுத்த வங்கிக்கு உரிமையுண்டு.

(b) வாடிக்கையாளர் வங்கிக்கு எழுத்துமூல முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு எந்த நேரத்திலும் இச் சேவைகளின் பாவனையை முடிவுறுத்த முடியும்.

(c) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில், சேவைகளின் மற்றும்/அல்லது வாடிக்கையாளரினால் சேவைகள் பயன்படுத்தப்படுவதன் இடைநிறுத்தத்தை அல்லது முடிவுறுத்துகையைச் செயற்படுத்தும் நோக்கத்திற்கு அவசியமான சகல ஏற்பாடுகளும் (சரத்துக்கள் 3(b), 4, 7, 8, 9, மற்றும் 10 என்பனவும் இதில் உள்ளடங்கும்) இடைநிறுத்தம் அல்லது முடிவுறுத்தலின் பின்பும் பூரணமாக நடைமுறையிலிருக்கும். அத்தகைய இடைநிறுத்தம் அல்லது முடிவுறுத்தல் இருந்தபோதிலும், வாடிக்கையாளரினால் செய்யப்படுவதற்கு அல்லது நிறைவேற்றப்படுவதற்கு எஞ்சியுள்ள ஏதேனும் கடப்பாடுகள் அல்லது பொறுப்புகள் சம்பந்தப்பட்ட மட்டில், அவர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

12. திருத்தங்கள்

வங்கியானது காலத்திற்குக் காலம் எந்த நேரத்திலும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளைத் திருத்த மற்றும்/அல்லது மேலதிக விதிகள் மற்றும் நிபந்தனைகளைச் சேர்க்க உரிமை கொண்டுள்ளது. வங்கியினால் வாடிக்கையாளருக்கு நியாயமான முன்னறிவித்தல் கொடுக்கப்படும் பட்சத்தில் திருத்தப்பட்ட மற்றும்/அல்லது மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் நடைமுறைக்கு வரும். இந்த முன்னறிவித்தல்

ஒன்லைன் ஊடகத்தின் (அல்லது ஊடகங்களின்) வழியாக, காட்சிக்கு வைக்கப்படுவதன் மூலம், விளம்பரத்தின் மூலம் அல்லது வங்கி பொருத்தமெனக் கருதும் வேறு வழியில் வழங்கப்படும். மாற்றங்கள் நடைமுறைக்கு வந்த திகதியில் அல்லது அதற்குப் பின்னரும் வாடிக்கையாளர் இச் சேவைகளைப் பயன்படுத்தினால் அல்லது தொடர்ந்து பேணினால், அவை வாடிக்கையாளரைப் பிணிக்கும்.

13. தொடர்பாடல்

(a) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் தொடர்ச்சியாக வழங்கப்படவிருக்கும் ஒவ்வொரு வகையான அறிவித்தல் தொடர்பாகவும் அறிவித்தலின் வடிவம் (எழுத்துமூல அல்லது வேறு வடிவத்திலான) மற்றும் தொடர்பாடல் வழிமுறை என்பவற்றைக் காலத்திற்குக் காலம் பரிந்துரைக்க வங்கி உரிமை கொண்டுள்ளது.

(b) நேரில் விநியோகிக்கப்படும் மற்றும் தபால், தொலைநகல் அனுப்பீடு ரெலெக்ஸ் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும் தொடர்பாடல்கள், (நேரடி விநியோகத்தைப் பொறுத்தவரையில்) நேரடியாக விநியோகிக்கப்பட்ட நேரத்தில் அல்லது வாடிக்கையாளரினால் வங்கிக்குக் கடைசியாக எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்ட முகவரியில் கையளிக்கப்பட்டதும் (தபால் மூலம் அனுப்பப்படும் பட்சத்தில்) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிலுள்ள முகவரியாயின் தபாலில் இடப்பட்ட பின் 48 மணிநேரத்திலும் வெளிநாட்டு முகவரியாயின் தபாலில் இடப்பட்ட பின் ஏழு தினங்களிலும் வாடிக்கையாளருக்குக் கிடைத்துவிட்டதாகக் கருதப்படும். (தொலைநகல், ரெலெக்ஸ் அல்லது மின்னஞ்சலைப் பொறுத்தவரையில்) வாடிக்கையாளரினால் வங்கிக்குக் கடைசியாக எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்ட தொலைநகல் அல்லது ரெலெக்ஸ் இலக்கத்திற்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்ட உடனேயே கிடைத்துவிட்டதாக் கருதப்படும். வாடிக்கையாளரினால் வங்கிக்கு அனுப்பப்படும் தொடர்பாடல்கள், அவை உண்மையாக வங்கிக்குக் கிடைத்த திகதியிலேயே விநியோகிக்கப்பட்டவையாகக் கருதப்படும்.

14. பன்முகத் தன்மை

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளிலுள்ள ஒவ்வொரு ஏற்பாடும் தனித்தனியானது மற்றும் ஒன்றிலிருந்தொன்று வேறுபட்டது. ஏதேனும் நியாயாதிக்கத்தின் சட்டங்களின் கீழ், இந்த ஏற்பாடுகளில் ஒன்று அல்லது பல ஏதேனும் நேரத்தில் மற்றும் ஏதேனும் வழியில் சட்டவிரோதமானதாக, வலுவற்றதாக அல்லது செயற்படுத்த முடியாததாக இருந்தாலும்,

எஞ்சியுள்ள ஏனைய ஏற்பாடுகளின் சட்டபூர்வத் தன்மை, வலு அல்லது செயற்படுத்தக்கூடிய தன்மை அதனால் எவ்விதத்திலும் பாதிக்கப்பட மாட்டாது.

15. விலக்களிப்பு

வங்கியின் ஏதேனும் செயல், தாமதம் அல்லது தவிர்ப்பு காரணமாக, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அதற்குள்ள உரிமைகளின், அதிகாரங்களின் அல்லது பெறக்கூடிய நிவாரணங்களின் தொடர்ச்சியான பிரயோகம் பாதிக்கப்பட மாட்டா. இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான உரிமைகளும் நிவாரணங்களும் ஒட்டுமொத்தமானவை என்பதுடன் சட்டத்தினால் வழங்கப்பட்ட உரிமைகள் மற்றும் நிவாரணங்களிலிருந்து பிரத்தியேமானவை அல்ல.

16. நானாவித விடயங்கள்

(a) சம்பந்தப்பட்ட கணக்கு ஒரு கூட்டுக் கணக்காயின், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள **“வாடிக்கையாளர்”** என்ற பதம் கூட்டுக் கணக்கு வைப்பாளர்கள் அனைவரையும் தனித்தனியே ஒவ்வொருவரையும் குறிக்கும். சகல வாடிக்கையாளர்களும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்பட்டுள்ளனர். இச் சேவைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் அவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாளியாவார்கள்.

(b) சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி, ‘‘நபர்’’ என்ற பதம் ஒரு தனிப்பட்ட ஆளை, நிறுவனத்தை, கம்பனியை, கூட்டுத்தாபனத்தை அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்களின் அமைப்பொன்றைக் குறிக்கும்.

17. ஆட்சி செய்யும் சட்டம் மற்றும் நியாயாதிக்கம்

(a) இச் சேவைகளும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும்.

(b) வங்கி, கணக்கு வைப்பாளர் ஆகிய இருதரப்புக்களும் இலங்கை நீதிமன்றத்தின் வரையறையற்ற நியாயாதிக்கத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். எனினும், இந்த விதிகள்

மற்றும் நிபந்தனைகள் வேறேதும் தகுதிவாய்ந்த நியாயாதிக்கப் பிரதேசங்களின் நீதிமன்றங்களிலும் அமுல் செய்யப்படலாம்.

18. ஆட்சி செய்யும் உரை

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஆங்கில உரைக்கும் ஏனைய மொழி உரைகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில், ஆங்கில உரையே சரியானதாக மேலாதிக்கம் செலுத்தும். விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஆங்கில உரை மற்றும் சிங்கள மொழிபெயர்ப்பை www.hsbc.lk/terms-and-conditions என்ற வங்கியின் வலைத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

Version: PIBTC2024JUL-TAM

ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் - இலங்கைக் கிளையின் வெளியீடு